10/=

பக்கங்கள் 08

Registered as a Newspaper in Srilanka

# எதிரொலி
Ethiroli

குரல் 01 அதிர்வு 216 செவ்வாய்க்கிழமை டிசெம்பர் 26 2017 ethirolimedia@gmail.com 021 224 38 18 / 021 300 48 48

## தேர்தலில் 26 மீறல்கள்

கொழும்பு, டிசெ.26

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் சட்டங்கள் மீறப்பட்டமை தொடர்பில் இதுவரை 26 சம்பவங்கள் பதிவாகியிருப்பதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

“கடந்த 9ஆம் திகதி தொடக்கம் 25ஆம் திகதி அதிகாலை 6 மணிவரை இவ்வாறான 26 சம்பவங்கள் பதிவாகியுள்ளன. முறைப்பாடுகளின் அடிப்படையில் 25 பேர் கைதுசெய்யப்பட்

06▶

# தடை நீக்கம்!

கொழும்பு,டிசெ.26

ரஷ்யாவால் இலங்கைக்கு எதிராக விதிக்கப்பட்ட தேயிலை ஏற்றுமதித் தடை டிசெம்பர் மாதம் 30 ஆம் திகதி முதல் நீக்கப்பட்டவுள்ளதாக அமைச்சர் நவீன் திஸாநாயக்க நேற்றுத் திங்கட்கிழமை தெரிவித்தார். ரஷ்யாவுக்கு அனுப்பட்ட தேயிலைக்குள் ’கெப்ரா’ என்ற வண்டுகண்டுபிடிக்கப்பட்டதை

06▶




## நலம்தானா? நலம்தானா?



கொழும்பு,டிசெ.26

உடல் நலக் குறைவு காரணமாகத் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த எதிர்க்கட்சித் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் நேற்றுத் திங்கட்கிழமை வீடு திரும்பினார்.

கடந்த வியாழக்கிழமை, உடல்நலக் குறைவு

06▶

## கப்பலைத் தேடும் ஆளுநர்

யாழ்ப்பாணம், டிசெ.26

தமிழ்நாட்டில் உள்ள சிதம்பரம் தில்லை நடராஜர் ஆலயத்தில் நடைபெறும் மார்கழித் திருவாதிரைத் திருவிழாவில் பங்கேற்பதற்கு, யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய துணைத் தூதரகத்தில் நூற்றுக்கும் அதிகமானோர் பதிவு செய்துள்ள போதும், இன்னும்

06▶

## அஞ்சல் வாக்களிப்பு ஜனவரி 25, 26 இல்

கொழும்பு,டிசெ.26

341 உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலின் போது அரச சேவையாளர்களுக்கான அஞ்சல் மூல வாக்களிப்பு எதிர்வரும் ஜனவரி மாதம் 25, 26ஆம் திகதிகளில் இடம்

06▶

## ஆழிப்பேரலை நினைவேந்தல் முல்லைத்தீவில் இன்று

முல்லைத்தீவு, டிசெ. 26

ஆழிப்பேரலை காவு கொண்ட உறவுகளின் 13 ஆவது ஆண்டு நினைவேந்தல் இன்றாகும். இதனையொட்டி முல்லைத்தீவு சுனாமி நினைவாலயத்தில் இன்று அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

காலை 7 மணி தொடக்கம் 9 மணி வரை இடம்

06▶

## முதலமைச்சரின் உத்தரவை கண்டுகொள்ளாத பொலிஸ்!

### வவுனியா பஸ் நிலையம் மீண்டும் சிக்கலில்

வவுனியா, டிசெ. 26

வவுனியா புதிய பேருந்து நிலையம் இயங்க வசதியாக பழைய பேருந்து நிலையத்தை மூடுமாறு பொலிஸாருக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் இட்ட கட்டளை மீறப்பட்டுள்ளது.

வவுனியாவில் புதிய பேருந்து நிலையம் அமைக்கபட்டமை சர்ச்சையாக வெடித்

06▶

## புலிகளின் தங்கத்தை தேடிய 11 பேர் கைது

புதுக்குடியிருப்பு, டிசெ. 26

விடுதலைப் புலிகளின் முகாம் இருந்த இடத்தில் தங்கம் தேடிய 11 பேரை புதுக்குடியிருப்புப் பொலிஸார் நேற்றுமுன்தினம் இரவு கைது செய்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் அனைவரும் மாத்தறை, கொழும்பு, கண்டி, கொட்டாவ, கடவத்த, கொட்டகேன, கிரான்ட்பாஸ்,

06▶

## பால் புரைக்கேறி குழந்தை மரணம்

சாவகச்சேரி, டிசெ. 26

தாய்ப்பால் புரைக்கேறியதில் இரண்டு மாதமேயான குழந்தை மரணமானது. நேற்று மாலை நடந்த இச் சம்பவத்தில் சாவகச்சேரி வடக்கைச் சேர்ந்த சினாட் ஜெகத் என்ற குழந்தையே உயிரிழந்தது.

தொற்றுநோய்க் காரணமாக சாவகச்சேரிவைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த குழந்தையே பால் புரைக்கேறி மரணமானது. (ச)

## வடக்கு , கிழக்கு வீதிகளுக்கு விமோசனம்

கொழும்பு, டிசெ.26

தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சினால் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வீதி அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதற்கான திட்டத்தின் கீழ் 1,847. 4 கிலோ மீற்றர் வீதிகள் புனரமைக்கப்படுவதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டிருப்பதாக தேசிய ஒருமைப்பாடு மற்

06▶

## பாலன் பிறந்த பொழுதில்....





நத்தார் தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் விசேட ஆராதனைகள் நேற்று நள்ளிரவு நடைபெற்றன. (அ)



உங்களுடைய இலக்கங்களை எங்களுக்கு வழங்குங்கள்

உங்களுடைய வியாபாரத்துடன் வாடிக்கையாளர்களை தொடர்புபடுத்துவோம்

பல்வேறு வழிகளில் உங்களின் தகவல்களை அனுப்பலாம்

- த.பெ.எண் 2333 கொழும்பு முகவரிக்கு தபால் அட்டை அனுப்பவும்.
- இ-மெயில் info@rainbowpages.lk
- rainbowpages.lk சென்று Register your business இல் பதிவு செய்யவும்.
- 0712399399 இலக்கத்துக்கு sms,viber or whatsapp இற்கு மெசேஜ் பண்ணவும்
- விபரங்களை 011 2391888 பெக்ஸ் செய்யவும்.

SLT ரெயின்போ பேஜஸில் இலவசமாக பதிவு செய்து வியாபாரத்தை விரிவுபடுத்துங்கள்.

SLT RAINBOW PAGES
Print & Digital Directories

உங்களின் வளமான வியாபாரத்திற்கு கைகொடுக்கும் SLT ரெலிகொம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடைகிறது!



கொழும்பு,டிசெ.26

தேசிய சுதந்திர முன்னணியில் மாகாண சபை உறுப்பினர்கள் 3 பேரும், வேறு அரசியல் கட்சிகளின் முக்கிய உறுப்பினர்கள் 51 பேரும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இணைந்து கொள்ளவுள்ளதாக இராஜாங்க அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை தெரிவித்தார்.

இந்த வாரம் மூன்று மாகாணசபை உறுப்பினர்கள் தம்முடன் இணைந்துள்ளனர். அடுத்தவாரம் அளவில் வேறு கட்சிகளைச் சேர்ந்த பலரும் தமது கட்சியுடன் இணைந்து கொள்ளவுள்ளதாகவும் தெரிவித்தார். (அ)

# இலங்கை விடயத்தில் இந்தியா தோல்வி!

கொழும்பு,டிசெ.26

இலங்கையுடனான வெளிநாட்டுக் கொள்கையில் நரேந்திர மோடி தலைமையிலான இந்திய அரசாங்கம் தோல்வியடைந்துள்ளதாக இந்திய காங்கிரஸ் கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

இலங்கையில், சீனாவின் ஆதிக்கம் இந்தியாவைப் பொறுத்தவரை கவலைக்குரிய விடயம் எனக் கட்சியின் பேச்சாளர் மனிஸ் திவாரி குறிப்பிட்டார்.

அத்துடன் நேபாளத்தின் புதிய அரசாங்கம், இந்தியாவின் கொள்கைகளுக்குச் சாராது தனித்தியங்குகிறது. மாலைதீவு, சீனாவுடன் திறந்த பொருளாதார உடன்படிக்கையில் இந்தியாவுக்கு அறிவிக்காமலேயே கைச்சாத்திட்டுள்ளது. இந்தியாவின் தவறான வெளிநாட்டுக் கொள்கையின் காரணமாகவே இவை அனைத்தும் நிகழ்ந்தன என கங்கிரஸ் கட்சியின் பேச்சாளர் குறிப்பிட்டார். (அ)



# மண்சரிவு அபாயம்



கொழும்பு,டிசெ.26

கொஸ்லந்த அம்பிட்டிகந்தப் பகுதியில் மண் சரிவு அபாயம் காணப்படுவதாக ஹல்துமுல்லை பிரதேச செயலாளர் காரியாலயத்தின் அனர்த்த முகாமைத்துவத்துக்கான அதிகாரி வந்த குமார நேற்றுத் தெரிவித்தார்.

குறித்த பகுதியில் கடந்த 22 ஆம் திகதி மண் சரிவு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்த அவர், மண் சரிவு ஏற்பட்ட பகுதியினை அண்மித்த பிறிதொரு பகுதியில் வெடிப்புகள் ஏற்பட்டுள்ளதாகவும்,இதனால் அம்பிட்டிகந்தப் பகுதியில் மண் சரிவு ஏற்படுவதற்கான சாத்தியக் கூறுகள் காணப்படுவதாகவும் தெரிவித்தார். தொடர்ச்சியாக நிலவி வரும் சீரற்ற காலநிலையே இதற்குக் காரணமாகும். (அ)

# மழை அதிகரிக்கும்

கொழும்பு,டிசெ.26

நாட்டின் வடக்கு, வடமத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களில் மழை அதிகரிக்கக் கூடும் என காலநிலை அவதான நிலையம் நேற்றுத் திங்கட்கிழமை தெரிவித்தது.

இதனுடன் ஹம்பாந்தோட்டை, நுவரெலிய, இரத்தினபுரி, காலி மற்றும் மாத்தறை ஆகிய மாவட்டங்களில் 75 மில்லி மீற்றர் அளவில் மழை பெய்யக்கூடும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் போது அந்தப் பகுதிகளில் தற்காலிகமாகப் பலத்த காற்று வீசக்கூடும்.மேலும் மின்னலினால் ஏற்படும் ஆபத்துக்களைக் குறைத்துக் கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் கேட்டுக்கொண்டுள்ளனர். (அ)

# ஆசியாவின் முதலாவது சுற்றுலாத் திட்டம்



கொழும்பு,டிசெ.26

உலகில் உள்ள செல்வந்தச் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் வகையில் பெந்தர - தேத்துவ வலயத்தைத் தரமுயர்த்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இதன்படி ஆசியாவின் முதலாவது சுற்றுலாத் திட்டமான பெந்தர - தேத்துவ சுற்றுலாத் திட்டம் 2018 ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளதாக அமைச்சர் கயந்த கருணாதிலக நேற்றுத் திங்கட்கிழமை தெரிவித்தார். இதற்காகச் சர்வதேச முதலீட்டாளர்களிடமிருந்து கேள்விப்பத்திரங்களைக் கோருவதற்கான செயற்றிட்டம் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளது. குறித்த திட்டத்துக்காக 1800 ஏக்கர் காணி அரசாங்கத்தினால் சுவீகரிக்கப்பட்டுள்ளன. இதில் காணியை இழந்த உரிமையாளர்களுக்கு நஷ்ட ஈட்டை வழங்கும் பணிகள் தற்போது பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார். (அ)

# பட்டாசு விபத்து அதிகரிப்பு



கொழும்பு,டிசெ.26

நத்தார் பண்டிகை ஆரம்பித்துள்ள நிலையில் பட்டாசு வெடிப்பதினால் ஏற்படும் விபத்துக்கள் அதிகரித்துள்ளதாகக் கொழும்புத் தேசிய மருத்துமவனையின் அவரச விபத்துப் பிரிவின் தேசிய பயிற்றுவிப்பு அதிகாரி புஷ்பா ரம்யானி நேற்றுத் திங்கட்கிழமை தெரிவித்தார்.

பட்டாசு விபத்துக்களில் சிக்கி 4 பேர் மருத்துவமனையில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை சேர்க்கப்பட்டுள்ளனர். (அ)

# முகம் கழுவச் சென்றவர் மூழ்கினார்

கொழும்பு,டிசெ.26

குளியாப்பிட்டி தங்கொட்டுவப் பகுதியில் பாதுகாப்பற்ற கிணற்றில் வீழ்ந்து இளைஞர் ஒருவர் நேற்று திங்கட்கிழமை உயிரிழந்தார்.

நேற்று அதிகாலையில் முகம் கழுவுவதற்காகச் சென்ற வேளையிலேயே அவர் கிணற்றில் வீழ்ந்ததாகவும் நேற்று மதியமே அவரது சடலம் மீட்கப்பட்டது. சம்பவத்தில் 31 வயதுடைய திருமணமாகாத இளைஞர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். சடலம் பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ள நிலையில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)



# தொல்பொருள் சேதம்: அபராதம் அதிகரிப்பு

கொழும்பு,டிசெ.26

தொல்பொருள்களைச் சேதப்படுத்துபவர்களுக்கு அறவிடப்படும் அபராதத் தொகையினை அதிகரிக்கத் தொல்பொருள் பாதுகாப்புத் திணைக்களம் நடவடிக்கை எடுக்கவுள்ளதாகத் தொல்பொருள் பாதுகாப்புத் திணைக்களத்தின் பணிப்பாளர் பி.பி. மண்டாவல நேற்றுத் திங்கட்கிழமை தெரிவித்தார்.

தொல்பொருட்களைச் சேதப்படுத்துபவர்களுக்குத் தற்பொழுது 50 ஆயிரம் ரூபா அபராதம் அறவிடப்படுவதாகவும், அதனை 20 இலட்சமாக அல்லது அதற்கு அதிகமாக அறவிடுவதற்குச் சட்டத்தில் திருத்தங்களைக் கொண்டு வர நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் தெவித்தார். (அ)







# சுயேச்சைக் குழுவின் அலுவலகம் திறப்பு

யாழ்ப்பாணம், டிசெ.26

உள்ளூராட்சித் தேர்தலில் வலி. கிழக்குப் பிரதேச சபையில் வாளிச் சின்னத்தில் போட்டியிடும் கா.கதிர்காமநாதன் தலைமையிலான சுயேச்சைக் குழுவின் புத்தூர் காரியாலயம் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது. இந்தக் காரியாலயத்தை சட்டத்தரணி ரகுபதி திறந்து வைத்தார். அதன் பின்னர் சுயேச்சைக் குழுவின் வேட்பாளர் அறிமுக நிகழ்வும் இடம்பெற்றது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிரொலி
Ethiroli
செவ்வாய், 26 டிசெம்பர் 2017 ethirolimedia@gmail.com

# தினகரன் சொல்லும் பாடம்

தமிழகத்தின் ஆர்.கே நகர் இடைத் தேர்தலில், சுயேச்சையாகப் போட்டியிட்ட டிடிவி தினகரன், அமோக வெற்றியீட்டி, ஆளும் அதிமுக அரசுக்கு சவால் விடுத்துள்ளார்.

முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா கடைசியாக, ஆர்.கே நகரில் போட்டியிட்டே சட்டமன்றத்துக்கு தெரிவாகியிருந்தார். அவரின் மறைவுக்கு பின்னர் குறித்த தொகுதிக்கான எம்.எல்.ஏ பதவி வெறிதானதால், அந்த இடத்தை நிரப்பவே இந்த இடைத்தேர்தல். ஏற்கனவே ஒருமுறை ஆர்.கே நகருக்கான தேர்தல் அறிவிக்கப்பட்டு, தேர்தல் விதிகளுக்கு மாறாக பணத்தைக் கொடுத்து வாக்குகளை அபகரிக்கும் நடவடிக்கைகள் கட்டுமீறிப் போனதால், அந்தத் தேர்தல் இடைநிறுத்தப்பட்டிருந்தது. அப்போது தினகரன் அதிமுகவின் வேட்பாளாராக களமிறங்கியிருந்தார். ஓ.பன்னீர்ச்செல்வம் இரட்டை இலைச் சின்னத்துக்கு உரிமை கோரியிருந்ததால், அந்தத் தேர்தலில் தினகரன் தொப்பிச் சின்னத்தில் களமிறங்கியிருந்தார். ஆனால் இப்போது களம் மாறியிருந்தது. தினகரன் அதிமுகவில் இருந்து நீக்கப்பட்டு, இரட்டை இலைச்சின்னத்தில் மதுசூதனன் போட்டியிட்டார். தினகரன் இம்முறை சுயேச்சையாக 'குக்கர்' சின்னத்திலேயே தேர்தலைச் சந்திக்க வேண்டியிருந்தது.

எதிரணியில் ஆட்சியில் இருக்கும் அத்தனை அதிகாரத்தோடும் அதிமுக. போதாக்குறைக்கு மக்களின் மனதில் நீங்கா இடம் பிடித்த இரட்டை இலைச் சின்னம் அவர்களிடம். கூடவே அதிமுக ஆட்சி மீது இருக்கும் அதிருப்தியை வாக்குகளாக மாற்றும் உத்வேகத்தோடு பிரதான எதிர்க்கட்சியான திமுக. இதனை விட பாஜக, நாம் தமிழர் என இன்னும் சில கட்சிகளின் போட்டி. இவற்றுக்கு நடுவே தனியாளாக நின்று வாகை சூடுவதென்பது, அதுவும் 40 ஆயிரத்துக்கும் அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெல்வது அத்தனை சுலபமல்லத்தான். திமுகவும், அதிமுகவும் சொல்வது போல தினகரன் பணத்தை வாரியிறைத்து மக்களின் வாக்குகளைக் கொள்ளையிட்டதாகக் கூறுவதை உண்மையாகவே எடுத்துக் கொண்டாலும், அவருக்கு வாக்களித்த அத்தனை பேருமா பணத்துக்காக விலை போயிருந்தனர்? குறைந்த பட்சம் ஒரு 10 ஆயிரம் வாக்குகளை அப்படிப் பணம் கொடுத்து மடக்கியிருக்கலாம். ஆனால் 89,013 வாக்குகளையும் பணம் கொடுத்து வாங்கியிருக்க துளியும் சாத்தியமில்லை. மிகத் தெளிவான தேர்தல் திட்டமும், ஆட்சியாளர்களுக்கு எதிரான அதிருப்தி அலையை மிகச் சாதுரியமாக தனக்குச் சாதகமாக்கியமையும், மத்திய அரசான பாஜக வை துணிந்து எதிர்த்தமையுமே தினகரனுக்கு இந்தளவு தூரம் வெற்றியைப் பெற்றுக் கொடுத்துள்ளன.

தினகரனின் இந்த வெற்றியில் இருந்து, இங்கு உள்ளூராட்சித் தேர்தலில் நிற்கும் நம்மவர்களும் சில பாடங்களைக் கற்க முடியும்.

1.எப்போதும் மக்கள் தமக்குப் பரிச்சயமான சின்னத்துக்கே வாக்களிப்பார்கள் என்ற அலட்சியத்தில் மக்கள் நலனைப் பாராமல், சின்னத்தை மட்டுமே கட்டிப் பிடித்துக் கொண்டிருப்பது நீண்ட நாளைக்குத் தாக்குப் பிடிக்காது.

2. மத்திய அரசுக்கு தாளம் போடும் கட்சிகளை விடவும், மத்திய அரசின் தவறுகளைத் தட்டிக் கேட்கும் துணிச்சலானவர்களுக்கு மக்கள் எப்போதும் வாய்ப்புக் கொடுக்க நினைப்பார்கள்.

3. அதிகாரம், சின்னம், செல்வாக்கு, கட்சி என்பவனவற்றை எதிரணி கொண்டிருந்தாலும் , மக்கள் ஆதரவு இருந்தால் சுயேச்சையாக நின்றும் வெல்ல முடியும்.

இப்படியான சில முக்கியமான பாடங்களை தினகரனின் வெற்றி சொல்லாமல் சொல்கிறது. அதனைச் சிக்கெனப் பிடித்தால் இங்கும் மாற்றங்கள் நிகழ வாய்ப்புண்டு.

"உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்"

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி:

# நல்லூர் தொகுதி வேட்பாளர் அறிமுகம்

யாழ்ப்பாணம், டிசெ 26

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் சின்னத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியுடன் இணைந்து போட்டியிடும் தமிழ்த் தேசிய பேரவையின் நல்லூர் தொகுதி வேட்பாளர் அறிமுகக் கூட்டம் நேற்று திங்கட்கிழமை நடைபெற்றது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைமைச் செயலகத்தில் மாலை 4 மணியளவில் நடைபெற்ற கூட்டத்தில் வேட்பாளர்கள் அறிமுகம் செய்து வைக்கப்பட்டனர். அத்துடன் வேட்பாளர்களுக்கான தேர்தல் விதிமுறைகள் தொடர்பான விளக்கவுரைகளும் இடம்பெற்றது.

2018 ஆம் ஆண்டு பெப்ரவரி 10 ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலில் நல்லூர் தொகுதியில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் சின்னத்தில் சம உரிமை இயக்கம் மற்றும் பொது அமைப்புக்களுடன் இணைந்து போட்டியிடுகின்றது.

நல்லூர்த் தொகுதியில் 12 வட்டாரங்களிலும் ஒவ்வொரு வட்டாரத்துக்கும் ஒரு வேட்பாளர் என்ற அடிப்படையில் 12 வேட்பாளர்களும் விகிதாசார அடிப்படையில் 11 வேட்பாளர்களும் போட்டியிடுகின்றனர்.

நல்லூர் பிரதேச சபைத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் விபரம் வருமாறு,

வட்டாரம் 1 - காரைக்கால் கௌசலா சிவா, வட்டாரம் 2 - கோண்டாவில் வடக்கு கந்தையா லவேந்தன், வட்டாரம் 3 -கோண்டாவில் கிழக்குவிநாயகம் குகதாசன், வட்டாரம் 4 - கொக்குவில் மேற்கு தேவராஜா ஷோபன், வட்டாரம் 5 - கேணியடிபத்மநாதன் மயூரன், வட்டாரம் 6 - கொக்குவில் மத்தி செல்லையா செல்வரத்தினம், வட்டாரம் 7 - கொக்குவில் கிழக்குகந்தையா நவரத்தினம், வட்டாரம் 8 - திருநெல்வேலி மத்தி. இரத்தினம் சிவநாதன், வட்டாரம் 9 - திருநெல்வேலி வாசுகி சுதாகர், வட்டாரம் 10- கல்வியன் காடு தெற்கு சண்முகலிங்கம் சுரேஸ் குமார், வட்டாரம் 11 - அரியாலை கிழக்கு அழகேந்திரம் அகிலாண்டரூபி, வட்டாரம்12 - மணியந்தோட்டம் சுப்பிரமணியம் சுசீந்திரன்



விகிதாசார பட்டியலில் இடம் பிடித்துள்ள வேட்பாளர்கள் விவரம்,

வட்டாரம் -1 லதா கோடீஸ்வரன், வட்டாரம் - 2 சுப்பிரமணியம் பாப்பம்மா, வட்டாரம் - 3 குலேந்திரன் பிரிந்தா, வட்டாரம் - 4ஜெகசோதி இராசலிங்கம், வட்டாரம் - 5 அருணச்சாலம் சண்முகலிங்கம், வட்டாரம் - 6 யூட்பிறைனார் அன்ரன் கொன்ஸர்ன்ரைன், வட்டாரம் - 7 யோகராசா அரிஜின், வட்டாரம் - 8 நல்லையா மதனகுமார், வட்டாரம் - 9 அருளானந்தம் அருள்செல்வன், வட்டாரம் - 10 சுப்பிரமணியம் பாமா, வட்டாரம்-11மகாதேவன் விஜீதரன்

# மானிப்பாய் வேட்பாளர் அறிமுகம்

மானிப்பாய், டிசெ. 26

உள்ளூராட்சி தேர்தலில் மானிப்பாய் பிரதேச சபைக்கான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர் அறிமுகம் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

வட மாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன், திருமதி யசோதை சரவணபவன், திருமதி லக்சிகா ஜெயசுதன், சி.ஜெபநேசன் ஆகியோர் பங்கேற்ற இந்நிகழ்வில் மானிப்பாய் பிரதேச சபையில் போட்டியிடும் வேட்பாளர் கள் கலந்து கொண்டனர். (ச)

## துப்பாக்கியைக் காட்டி மிரட்டி

# உந்துருளியை பறித்தது பொலிஸ்

யாழ்ப்பாணம், டிசெ. 26

கைத்துப்பாக்கியைக் காட்டி மிரட்டி இளைஞர் ஒருவரின் துப் உந்துருளியைப் பறித்துச் சென்றது பொலிஸ். சிவில் உடையில் நின்ற பொலிஸாரே இச்செயலில் ஈடுபட்டனர். எனினும் 3 மணி நேரத்தின் பின்னர் அந்த இளைஞரிடமே மோட்டார்சைக்கிள் ஒப்படைக்கப்பட்டது.

இச்சம்பவம் கடந்த சனிக்கிழமை யாழ்ப்பாணம் ஐந்து சந்திப் பகுதியில் இடம்பெற்றது.

இது குறித்துப் பாதிக்கப்பட்ட இளைஞர் கூறுகையில், "காரை நகரைச் சேர்ந்த நான் நண்பனுடன் சனிக்கிழமை யாழ். நகருக்கு வந்தோம். ஐந்துசந்தியில் நண்பர் ஒருவரை கண்டு வீதியோரமாக நின்று அவருடன் கதைத்துக் கொண்டு இருந்தோம்.

அவ்வேளையில், ஒரு மோட்டார் சைக்கிளில் வந்த இருவர், தமிழ் மொழியில், தாம் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிஸார் என்று கூறி மோட்டார் சைக்கிளை தருமாறு கேட்டனர். நான் மறுக்கவே. இடுப்பில் இருந்த கைத்துப்பாக்கியை எடுத்து மிரட்டி மோட்டார் சைக்கிளைப் பறித்துச் சென்றனர். போகும்போது மோட்டார் சைக்கிளை பொலிஸ் நிலையத்தில் வந்து பெறுமாறு கூறிச்சென்றனர்.

நாம் பொலிஸ் நிலையத்துக்கு சென்று மோட்டார் சைக்கிளைக் கேட்டபோது தமக்குத் தெரியாது என அங்கிருந்தவர்கள் கூறினர். நாம் சம்பவம் குறித்து முறைப்பாடு செய்யப்போவதாகக் கூறிய போது. பொலிஸாருக்கு எதிராக முறைப்பாடு செய்யமுடியாது என்றும் அவர்கள் வந்ததும் வாங்கிச் செல்லுமாறும் கூறினர்.

சம்பவம் குறித்து முறையிட யாழ். மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் அலுவலகத்துக்குச் சென்றோம். அங்கு அவர் இல்லை. இதையடுத்து, வட மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் அலுவலகத்துக்கு முறையிட சென்ற போது, அது குறித்து யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யலாம் என கூறி எம்மை அனுப்பி வைத்தனர்.

"மீண்டும் நாம் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்துக்குச் சென்ற போது, எம்மிடம் மோட்டார் சைக்கிளைப் பறித்து சென்றவர்கள் அங்கு வந்திருந்தனர். அவர்கள் எம்மிடம் மீள மோட்டார் சைக்கிளை ஒப்படைத்தனர்.

"மோட்டார் சைக்கிள் பறித்து சென்றமை தொடர்பில் முறைப்பாடு செய்ய சென்றபோது எமது முறைப்பாட்டை ஏற்க முடியாது என எம்மை திருப்பி அனுப்பினார்கள். குறித்த சிவில் உடை தரித்த இரு பொலிஸாரும் எமது மோட்டார் சைக்கிளைப் பறிமுதல் செய்து கொண்டுச் சென்று சட்டவிரோத செயலில் ஈடுபட்டு இருந்தால், எமது மோட்டார் சைக்கிள் இலக்கமே பதிவாகி இருக்கும்" எனத் தெரிவித்தனர்.

குறித்த சம்பவம் தொடர்பில், யாழ். பொலிஸ் நிலைய தலைமை பொலிஸ் பொறுப்பதிகாரியிடம் கேட்ட போது, "குறித்த இரு இளைஞர்கள் தொடர்பில் சந்தேகத்தில் விசாரணை செய்தோம். மோட்டார் சைக்கிளை பறிக்கவில்லை" எனத் தெரிவித்தார். (ச)

## இன்று நாளும் கோளும்

26.12.2017 செவ்வாய்க்கிழமை ஏவிளம்பி வருடம் மார்கழி மாதம் 11 ஆம் நாள்

சஷ்டி காலை 09.54 மணி வரை | சதயம் பகல் 08.31 மணி வரை | சித்தயோகம்
இராகு காலம் 04.30 - 06.00 | சுபநேரம் 07.45 - 08.45 | எமகண்டம் 12.00 - 01.30

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| வெற்றி | நன்மை | இலாபம் | செலவு | வரவு | சுகம் | சுபம் | பெருமை | மேன்மை | நலம் | நட்பு | சாந்தம் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜோசப் பரராஜசிங்கத்துக்கு யாழிலும் நினைவேந்தல்





யாழ்ப்பாணம், டிசெ.26

மாமனிதர் ஜோசப் பரராஜசிங்கம் அவர்களின் 12 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைமைச் செயலகத்தில் நேற்றுத் திங்கட்கிழமை பிற்பகல் 5.30 மணியளவில் நடைபெற்றது.

கட்சியின் செயலாளர் செல்வராஜா கஜேந்திரன் தலைமையில், அகவணக்கத்துடன் ஆரம்பமான இந்த நிகழ்வில் மாமனிதர் ஜோசப் பரராஜசிங்கத்தின் திருவுருவப் படத்துக்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மலர் மாலை அணிவித்தார். நினைவுச் சுடரினை நல்லூர்த் தொகுதி வேட்பாளர் வாசுகி சுதாகர் ஏற்றிவைத்தார். தொடர்ந்து மலரஞ்சலியும் நினைவுரைகளும் இடம் பெற்றன. (அ)

## 3000 போலிக் கணக்குகளை முடக்கியது பேஸ்புக்

கொழும்பு, டிசெ.26

இந்த வருடத்தின் இதுவரையான காலப் பகுதிக்குள் 3000 இலங்கையர்களின் பேஸ்புக் கணக்கு முடக்கப்பட்டுள்ளதாக பேஸ்புக் நிறுவனம் தெரிவித்துள்ளது.

போலி கணக்குகளை வைத்திருத்தல், பேஸ்புக் கணக்குகளை உருவாக்கி பண மோசடியில் ஈடுபட்டமை உள்ளிட்ட காரணங்களை அடிப்படையாகக் கொண்டு இந்தக் கணக்குகள் முடக்கப்பட்டதாக பேஸ்புக் நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

இந்த வருடம் பேஸ்புக் தொடர்பாக 3400 முறைபாடுகள் கிடைத்தமையை அடுத்து இதுதொடர்பில் பேஸ்புக் நிறுவனத்துக்குத் தெளிவுபடுத்தியதால், நிறுவனம் இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளதாக கணினி அவசர நடவடிக்கை பிரிவின் பொறியியலாளர் ரொசான் சந்திரகுப்தா தெரிவித்துள்ளர். (அ)

## அதிவேக வீதியால் வருமானம் உயர்வு



கொழும்பு, டிசெ.26

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் பயணிக்கும் வாகனங்களின் எண்ணிக்கை தற்போது அதிகரித்துள்ளதால், அதன்மூலம் கிடைக்கும் வருமானமும் அதிகரித்துள்ளதாக அரசு தெரிவித்துள்ளது.

"பாடசாலை விடுமுறை மற்றும் புத்தாண்டு காலத்தை முன்னிட்டு அதிவேக நெடுஞ்சாலையைப் பயன்படுத்துவோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

நாளாந்தம் பயணிக்கும் வாகனங்களின் எண்ணிக்கை 1 இலட்சத்துக்கும் அதிகமாகும். இதனால் நாளாந்தம் பெறப்படும் வருமானம் 3 கோடி ரூபாவுக்கும் அதிகம்.

இதேவேளை, அதிவேக நெடுஞ்சாலையில் வாகன நெரிசலைக் கட்டுப்படுத்துவதற்கான விசேட வேலைத் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. இதற்குப் பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்" என்று தெற்கு அதிவேக நெடுஞ்சாலை வீதி நடவடிக்கை மற்றும் முகாமைத்துவப் பணிப்பாளர் எஸ்.ஒபநாயக்க தெரிவித்துள்ளார். (அ)

# கல்வியமைச்சருக்கு டக்ளஸ் பாராட்டு



யாழ்ப்பாணம், டிசெ.26

கல்வி அமைச்சினால் வெளியிடப்படுகின்ற அனைத்து சுற்றறிக்கைகளையும் தமிழ் மொழியிலும் வெளியிட நடவடிக்கை எடுத்திருப்பது பாராட்டத் தக்க விடயமாகும். அதே வேளை, தமிழ் பாடநூல்கள் தொடர்பில் நான் ஏற்கனவே எடுத்துக்காட்டியுள்ள விடயங்கள் குறித்தும் கல்வி அமைச்சர் அவதானமெடுத்து, உரிய நடவடிக்கைகளை விரைந்து எடுக்க வேண்டுமென நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

"கல்வி அமைச்சின் சுற்றறிக்கைகள் உட்பட அனைத்துக் கடிதங்கள், ஆவணங்கள் என்பன இதுவரையில் தனிச் சிங்கள மொழியிலேயே தமிழ் பாடசாலைகள் மற்றும் கல்விப் பணிமனைகளுக்கு அனுப்பப்பட்டு வந்துள்ளதால், தமிழ் மொழி மூலப் பரிச்சயம் கொண்ட அதிகாரிகள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் உள்ளிட்டோர் பெரும் சிரமங்களையும், பாதிப்புகளையும் எதிர்நோக்கி வருவது தொடர்பில் நாடாளுமன்றத்தில் நான் தொடர்ந்தும் அவதானத்திற்குக் கொண்டு வந்துள்ளதோடு, கல்வி அமைச்சிலும் இது தொடர்பில் சுட்டிக்காட்டியிருந்தேன்.

அந்த வகையில், தற்போது இவ்விடயம் தொடர்பில் கல்வி அமைச்சர் அவர்கள் உரிய நடவடிக்கை எடுத்திருப்பது பாராட்டத்தக்க விடயமாகும்.

அதேபோன்று, நான் ஏற்கனவே நாடாளுமன்றத்திலும் கல்வி அமைச்சிலும் தொடர்ந்து வலியுறுத்தி வந்துள்ள தமிழ் மொழி மூலமான வரலாறு மற்றும் இந்து சமயம் தொடர்பிலான பாடசாலை நூல்களிலும் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். தமிழ் மொழி மூல பாடசாலை வரலாற்றுப் பாடநூல்களில் இந்த நாட்டு தமிழ் மக்களது வரலாறு குறித்து மறைக்கப்பட்டதும், திரிபுபடுத்தப்பட்டதும், தவிர்க்கப்பட்டதுமான நிலைமைகளே காணப்படுகின்றன. அதேபோன்று இந்து சமய பாடநூல்களிலும் குறைகள் மற்றும் தவறுகள் காணப்படுகின்றன. இவ்விடயங்கள் தொடர்பில் நான் முழு விபரங்களுடன் வாய்மொழி மூலமாகவும், எழுத்து மூலமாகவும் சுட்டிக் காட்டியுள்ளேன்.

எனவே, இவ்விடயங்கள் குறித்தும் கல்வி அமைச்சர் அவதானத்தில் கொண்டு, விரைந்து நடவடிக்கை எடுப்பதற்கு முன்வர வேண்டும் என்பதை நான் மீண்டும் வலியுறுத்த விரும்புகின்றேன். அண்மையில் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை தமிழ் பாட வினாத்தாளிலும் தவறு நிகழ்ந்துள்ளது. இத்தகைய விடயங்களில் தெளிவற்றவர்களைக் கொண்டு, தமிழ் மொழி மூல மாணவர்களது கல்வியில் பாதிப்பினை உண்டு பண்ணும் செயற்பாடுகள் தவிர்க்கப்படல் வேண்டும்" எனவும் அவர் தெரிவித்துள்ளார். (அ)



## தயவு செய்து அரிவரி படிச்சவைக்குக் கீறிப்போடாதையுங்கோ

காலமை உந்த ஸ்பீக்கர் சத்தம் கேட்டுத்தான் வேளைக்கே எழும்பினனான். இண்டைக்கு திருவெம்பாவை மூண்டாம் நாளா விட்டுது. விடிய எழும்பிக் கோவிலுக்குப் போவமெண்டால் உடம்பு ஏலாமைக் கிடக்கு. பின்னை எழும்பி வீட்டிலை இருந்தபடியே படிப்பைக் கேட்டன். ஆ! என்ன தமிழ். மாணிக்வாசகர் தமிழைக் குழைச்சு அப்பிடியே திருவாசகத்துக்கை புதைச்சுப்போட்டார். ஆர் கேட்டாலும் ஒருக்காக் கண்ணாலை கண்ணீர்வரும். சும்மா சொல்லப்பிடாது, அப்பிடி அவற்றை எழுத்து.

முதலி கோயிலுக்குப் போய் அப்பிடியே பேப்பர் கடைக்குப் போய் பேப்பரை வேண்டிக்கொண்டு ஆள் நேரை வீட்டை வந்திட்டான். எலக்ஸனைப்பற்றி ஏதாவது விசேஷ செய்தி இருக்கோ? எண்டு கேட்டன். அண்ணை இப்ப இரண்டு நாளைக்குள்ளை பாத்த செய்தி ஒண்டு ஞாபகத்துக்கு வருகிது. ஓம்! அண்ணை, உந்த எலக்ஸனைக் கண்காணிக்கிற "பெப்பரல்" எண்ட அமைப்பு என்ன சொல்லி இருக்கிது தெரியுமே? இந்த முறை எலக்ஸனிலை குற்றவாளியளும் களம் இறங்கினமெண்டு. அதைப் பாத்த நேரந்தொடக்கம் எனக்கு ஒரே யோசினை. என்ன நடக்கப் போகுதெண்ட ஏக்கம் வேறை. சனந்தான் பாவம். அவையும் என்னத்தைச் செய்யிறது.

ஆனால் இப்ப நடக்கிறதைப்பாத்தால் அவை சொன்னதும் சரி எண்டுதான் நினைக்கிறன். இப்ப கொஞ்ச நாளைக்கு முன்னம் ஆரோ பாதாளக் கோஷ்டியின்ரை மகனை எலக்ஸன் கேக்க வைக்கப் போகினமெண்டு வெளிக்கிட்டவையாம். ரணில்தான், அதை அறிஞ்சு தடுத்தவராம். அதுக்கு முன்னமும் பாதாளக் கோஷ்டியின்ரை தலைவர் ஆரோ ஒரு அரிசியல்வாதியிட்டை போய் இந்த முறை எங்களையும் எல்ஸன் கேக்கச் சேருங்கோ. இல்லாட்டி எங்கடை ஆக்களின்ரை சப்போட் உங்களுக்கு இல்லாமைப் போகும் எண்டு வெருட்டினவராம். அப்ப பெபரல் அமைப்புச் சொல்லுறதும் சரியெண்டுதான் நினைக்கிறன்.

எலக்ஸன் கேக்க ஆக்களை எடுக்கேக்கை கட்சியள் பட்ட பாட்டை பாத்தனியள்தானே? அவை என்ன ஆட்டம் போட்டினம். கடைசி நாள்வரைக்கும் உங்களைத்தான் போடுறம்..... உங்களைத்தான் பேடுறம் எண்டு காணுறவை எல்லாரிட்டையும் சொல்லிச் சொல்லிப் போட்டு கடைசியாக் கச்சேரியிலை குடுக்கேக்கை தங்களுக்கு விருப்பமான ஆக்களைக் குடுக்கப்போய் மாட்டுப்பட்டு அடிபிடிப்பட்டதையும் பாத்தனீங்கள் எல்லே! சில ஆக்களை வாருங்கோ கையெழுத்துப்போட எண்டு சொல்லிப் போட்டு இடையிலை ஆக்களை வைச்சு அவையளைக் கடத்திக் கொண்டுபோய் அவையளை தண்ணி வெந்நி இல்லாமைப் பின்னேரம் வரையும் வைச்சிருந்துவிட்டுக் கரப்பிலை இருந்து கோழியைத் துறந்துவிடுகிறமாதிரித் துறந்துவிட்டிட்டு, இப்ப பிரச்சினை பொலீஸ்வரை போவிட்டுது. செய்யக் கூடாத செயலெல்லாம் செய்திட்டினம். நடக்கக் கூடாததெல்லாம் எல்லாம் நடந்திட்டிது. இனி நடக்கிறதுக்கு ஒண்டுமில்லை. பல இடத்திலை தமிழன்ரை மானம் போனதுதான் மிச்சம்.

படிக்காத ஆக்கள் உப்பிடி நடந்தால் பறவாயில்லை. படிச்ச சனியள்தான் ஆகலும் அருவருப்பா நடந்திருக்கினம். கேட்டால் அதுக்கு ஆயிரம் காரணங்கள் சொல்லுவினம். நான் திரும்பத் திரும்பச் சொல்லுறன் எண்டு கோவிக்காதை யுங்கோ. இப்ப நடக்கப்போற எலக்ஸனிலை நாங்கள் புள்ளடி போட்டு ஒருத்தரையும் பாளிமென்ருக்கு அனுப்பப் போறதில்லை. எங்கடை எங்கடை கிராம சபைக்கும், பிரதேச சபைக்குந்தான் ஆக்களை அனுப்பப்போறம். அவை எங்கடை பிரச்சினையை அதிலை கதைச்சு, வளவு வாய்கால் சரி இல்லாட்டி அதைச் செய்து தாறது . றோட்டு இல்லாட்டி அதைப் போட்டுத் தாறது. எங்கடை சாமான் சக்கட்டை விக்கிற சந்தை சரி இல்லாட்டி அதைச் சரிக்கட்டித் தாறது எண்டு எங்களுக்கு என்ன வேணுமெண்டு அதைச் செய்துதாறதுக்குத்தான் உவையளைக் கீறி அனுப்பப் போறமல்லாது, தமிழற்றை பிரச்சினை தீர்க்க இல்லை. எல்லாட்டி உவை பிரதேசசபையிலை அல்லது கிராம சபையிலை போய்த் தனி ஈழம் கேக்கப்போறது இல்லை.

ஆனபடியால் எலக்ஸனுக்கு இன்னும் கொஞ்சநாள் கிடக்குத்தானே? அதுக்கை நல்லா யோசியுங்கோ. உங்கை ஒருத்தரும் பிறத்தியார் வந்து எங்கடை எல்லேக்கை எலக்ஸன் கேக்கப்போறதில்லை, எல்லே! எல்லாம் எங்களுக்கு நல்லாத் தெரிஞ்சவை. அவையுக்கை முதலிலை பாருங்கோ அவை வாள் வெட்டுச், சங்கிலி அறுப்பெண்டு கோடு கச்சேரிக்குப் போவையோ எண்டு. பிறகு பாருங்கோ ஆற்றை ஆக்கள் எண்டு. மழை, சூறாவளி எண்டு வரேக்கை குறுக்கை விழுந்து கிடக்கிற மரந்தடியை ஆளும், பேருமாப்போய் வெட்டித் துப்பரவாக்குவினமோ எண்டும் பாருங்கோ. அது எல்லாத்துக்கு முதலிலை ஆள் நல்ல டீசன்ரான ஆளோ எண்டுதான் பாக்க வேணும். அதை மறக்காதையுங்கோ. அதோடை அவை பள்ளிக் குடத்துக்குப் போனவையோ எண்டும் பாருங்கோ. தயவு செய்து அரிவரி படிச்சவைக்குக் கீறிப்போடாதையுங்கோ.

எலக்ஸனிலை நல்ல ஆக்களைத் தெரியாட்டிக் கடைசியிலை கஸ்டப்படுகிறது நாங்கள் தானே? வாற காசை மடக்கிப் போட்டு அரைகுறையா வேலை செய்யிறவை வந்தால் என்ன நடக்குமெண்டு தெரியுந்தானே? அவையின்ரை பொக்கற்றுகள் நிரம்பும். எங்கடை மடியிலை பாக்கிறதுக்குத்தன்னும் ஒரு வெள்ளைச் சல்லியும் இருக்காது. விளங்குதோ?

விநாசி சொல்லுறதை இப்ப கேக்க எல்லாம் பகிடியும், விளையாட்டாவுந்தான் இருக்கும். பொய்யையும், பிரட்டையும் சொல்லுறவனிட்டை மாட்டுப் பட்டிட்டீங்களோ! கழுத்திலை கயிறுதான்!

**- வில்லங்கம் விநாசி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாவசியப் பொருட்கள் தொடர்ந்தும் மானிய விலையில்

கொழும்பு, டிசெ.26

அத்தியாவசிய உணவுப் பொருட்களை நிலையான மற்றும் நிவாரண விலையில் நுகர்வோருக்கு வழங்குவதற்கான வேலைத்திட்டத்தை அரசாங்கம் மேற்கொண்டுள்ளது.

புத்தாண்டுக் காலத்துக்கு மாத்திரம் இதனை வரையறுக்காமல் தொடர்ந்தும் முன்னெடுப்பதே இதன் நோக்கமாகும் என்று கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனத்தின் தலைவரும் சதொச நிறுவனத்தின் பதில் தலைவருமான மொஹமட் றிஸ்வான் ஹமீன் தெரிவித்துள்ளார்.



இதுவரையில் 500 க்கும் மேற்பட்ட பொருட்களின் விலைகள் குறைந்த விலையில் பொதுமக்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

"அரிசி, சீனி, பருப்பு உள்ளிட்ட அத்தியாவசிய 7 உணவுப் பொருட்கள் விசேட விலையின் கீழ் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. இந்தப் பொருட்களை உரிய விலைக்கு விற்கத் தவறும் வர்த்தகர்களுக்கு எதிராக நடவடிக்கைகளை மேற்கொள்ள விசேட குழுக்கள் நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

அம்பன்பொல, அத்திட்டிய, அம்பலாந்தொட்ட, ஹல்லால்ல, சூலவத்த, பனாகல, சித்தமுல்ல மற்றும் ஊராபொல ஆகிய இடங்களில் புதிதாக 10 விற்பனை நிலையங்கள் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளன. எதிர்காலத்தில் சதொச விற்பனை நிலையங்களின் எண்ணிக்கையை 300 ஆக அதிகரிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது" என்றும் அவர் தெரிவித்தார். (அ)

## அந்தநாள் ஞாபகம்



### 26.12.2004

இந்து சமுத்திரத்தில் ஏற்பட்ட 9.3 ரிக்டர் அளவு நிலநடுக்கம், ஆழிப்பேரலையை ஏற்படுத்தி இலங்கை, இந்தியா, இந்தோனேசியா, தாய்லாந்து, மலேசியா, மாலை தீவுகள் ஆகிய நாடுகளில் பலத்த சேதத்தை ஏற்படுத்தியது. 300,000 பேருக்கு மேல் இறந்தனர்.

## மாணவர்களுக்கு உதவி: உடன் தொடர்பு கொள்க

நெல்லியடி, டிசெ.26

நெல்லியடி வர்த்தக சங்கத்தினர் தமது எல்லைக்குட்பட்ட பாடசாலைகளில் வறுமைக்கோட்டின் கீழ் கல்வி கற்கும் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை வழங்க உள்ளனர். எனவே உதவி தேவைப்படும் மாணவர்கள், தத்தமது பாடசாலை அதிபரின் பரிந்துரையுடன் நெல்லியடி வர்த்தக சங்கச் செயலாளர் சுரேரஞ்சனுடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## தேர்தலில் தெளிவின்மையா? விளக்கம் கொடுக்க 'ரெடி'

### தேர்தல் ஆணையகம் அறிவிப்பு

கொழும்பு, டிசெ.26

இம்முறை உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொகுதி ரீதியில் நடைபெறவுள்ளதால், இந்த முறைமையில் ஏதேனும் தெளிவின்மையிருந்தால் உரிய அதிகாரிகளிடம் விளக்கம் பெற முடியும் எனத் தேர்தல்கள் பிரதி ஆணையாளர் எம்.எம்.மொகமட் தெரிவித்துள்ளார்.

"இது குறித்து வேட்பாளர்களுக்கோ வாக்காளர்களுக்கோ விளக்கம் அவசியம் தேவையெனில் அவர்கள் மாவட்டங்களில்



உள்ள தெரிவத்தாட்சி அலுவலரையோ உதவித் தேர்தல் ஆணையாளரையோ தொடர்புகொள்ள முடியும்.

நாற்பத்தேழு ஆண்டுகளுக்குப் பின்னர் தொகுதி வாரியாக நடைபெறும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் வாக்கெடுப்பு தொடர்பில், வாக்காளர்களுக்கு தேவையான விளக்கங்களை வழங்க தேர்தல்கள் ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது. புதிய முறை தேர்தல் குறித்து உள்ளூராட்சி மன்றங்களுக்குப் போட்டியிடும் வேட்பாளர்களுக்கே சரியான தெளிவு இல்லாததால், அவர்களுக்குத் தெளிவுபடுத்த மாவட்ட ரீதியிலும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது" என அவர் மேலும் கூறினார். (அ)

## மரக் கடத்தல் முறியடிப்பு

கிளிநொச்சி, டிசெ.26

கிளிநொச்சி, அக்கராயன்குளம் பிரதேசத்திலிருந்து, பெறுமதியான பாலை மரக்குற்றிகளுடன் சென்ற இரண்டு வாகனங்களை நேற்றுக் காலை கிளிநொச்சிப் பொலிஸார் மடக்கிப் பிடித்துள்ளதுடன், 12 மரக்குற்றிகளையும் கைப்பற்றியுள்ளனர்.

அம்பாள்குளம் பகுதியில் வைத்து, கிளிநொச்சி, முல்லைத்தீவு பிரதி பொலிஸ்மா அதிபரின் விசேட மது ஒழிப்பு பிரிவினராலேயே குறித்த மரக்குற்றிகள் கைப்பற்றப்பட்டுள்ளன. (அ)

## அலங்கார மீனால் 1,670 மில்லியன் வருமானம்

கொழும்பு, டிசெ.26

2017 ஜனவரி மாதம் முதல் செப்ரெம்பர் மாதம் வரையான காலப்பகுதியில் 18 ஆயிரத்து 260 மெற்றிக் தொன் மீன் மற்றும் மீனைக்கொண்டு தயாரிக்கப்பட்ட உணவுப் பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளதாக கடற்றொழில் மற்றும் நீரியல்வள அபிவிருத்தி அமைச்சு அறிவித்துள்ளது.

மேலும் குறித்த காலப்பகுதியில் அலங்கார மீன் ஏற்றுமதி மூலம் 1,670 மில்லியன் ரூபாவுக்கு மேற்பட்ட தொகை வருமானமாகப் பெறப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இதனையடுத்து, இலங்கையில் அலங்கார மீன் வளர்ப்பை இன்னும் ஊக்குவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (அ)

## மோசடி முகவர்கள் விளக்கமறியலில்

கொழும்பு, டிசெ.26

வெளிநாடுகளுக்குச் சட்டவிரோதமாக அனுப்பி வைப்பதாகக் கூறி, பலரிடம் பணத்தைப் பெற்று மோசடி செய்த முகவர்கள் இருவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சீதுவைப் பொலிஸாருக்குக்கிடைத்த முறைப்பாடு ஒன்றுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளை அடுத்தே இந்தச் சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் வெளிநாடுகளுக்கு அனுப்பி வைப்பதாகக் கூறி நாட்டில் பல பிரதேசங்களைச் சேர்ந்தவர்களிடம் பணத்தைப் பெற்றுள்ளனர். சந்தேகநபர்களிடம் இருந்து 61 பேரின் கடவுச்சீட்டுக்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

சந்தேகநபர்கள் நீர்கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டபோது, எதிர்வரும் 29ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது. (அ)

## கவனம் மக்களே! கலப்பட அரிசி!!

கொழும்பு, டிசெ.26

உள்ளூர் மற்றும் வெளிநாட்டு அரிசியை கலந்து நுகர்வோருக்கு விற்பனை செய்யும் கலப்பட வியாபாரம் ஒன்று நடைபெற்று வருவதாக மரதகாமுல அரிசி உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

மிகவும் தரம் குறைந்த இந்த அரிசி சந்தையில் அதிக விலைக்கு விற்பனை செய்யப்படுவதாக சங்கத்தின் தலைவர் பீ.கே. ரஞ்சித் தெரிவித்துள்ளார்.

இது சம்பந்தமாக அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்ட போதிலும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதால், அரிசியை கொள்வனவு செய்யும்போது மிகவும் கவனமாக இருக்குமாறு ரஞ்சித் நுகர்வோரிடம் கோரிக்கை விடுத்துள்ளார். (அ)





## அரங்க நிகழ்வும் கலந்துரையாடலும்





யாழ்ப்பாணம், டிசெ.26

யாழ்ப்பாணம், கந்தர்மடத்தில் உள்ள பண்பாட்டு மலர்ச்சிக் கூடத்தில் புலம்பெயர் தமிழ் செயற்பாட்டாளர்களான பேராசிரியர் மோகன ராஜா (வட கரோலினா பல்கலைக்கழகம்) மற்றும் ஞானசேகரன் மகிசன் (பிறின்ஸ்டன் பல்கலைக்கழகம்) ஆகியோருடனான விசேட கலந்துரையாடலும் அரங்க நிகழ்வும் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத் தமிழர்களுக்கு தமிழகம் எப்போதும் ஆதரவளிக்கும்

## சுமந்திரனிடம் தெரிவித்தார் தினகரன்


சென்னை, டிசெ. 26

தமிழக இடைத் தேர்தலில் வரலாற்று வெற்றி பெற்ற டி.டி.வி. தினகரனை நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் நேற்று சந்தித்தார்.

கன்னியாகுமரியில் நேற்று நடந்த கிறிஸ்மஸ் நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனும் கலந்து கொண்டார்.

"ஈழத் தமிழர்களின் எதிர்கால அபிலாஷைகளுக்காக இணைந்து செயற்படத் தயார்" என தினகரன் தெரிவித்தார் என சுமந்திரன் எம்.பி. தெரிவித்தார்.

இந்நிகழ்வில் கலந்து கொள்ளவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, எதிர்க்கட்சி தலைவரான சம்பந்தன் தமிழகம் செல்லவிருந்தார். திடீர் உடல் நலக் குறைவால் அவரின் பயணம் இரத்தானமை குறிப்பிடத்தக்கது. (ச)



## விபத்தில் பெண்படுகாயம்

யாழ்ப்பாணம், டிசெ. 26

பாதசாரிகள் கடவையில் வீதியைக் கடந்த பெண்ணை மோட்டார் சைக்கிள் மோதியதில் அவர் தலையில் படுகாயமடைந்தார்.

நேற்று மாலை 4.30 மணியளவில் யாழ்ப்பாணம் ஆரியகுளம் பகுதியில் இவ்விபத்து இடம்பெற்றது.

தென்னிலங்கையில் இருந்து வந்த பெண் நாகவிகாரையில் வழிபாடு செய்த பின்னர் பாதசாரிகள் கடவையால் வீதியைக் கடந்துள்ளார். அப்போதே அவரை மோட்டார் சைக்கிள் மோதியது.

தலையில் படுகாயமடைந்த பெண் உடனடியாக யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

# தொடர்ச்சிகள்

### ஆழிப்பேரலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெறும் இந்நிகழ்வில் சர்வமத பிரார்த்தனைகள் இடம்பெறவுள்ளன.

இதேபோன்று இந்த அனர்த்தத்தால் உயிரிழந்த உறவுகளில் அடக்கம் செய்யப்பட்ட ஒட்டுசுட்டுான் - புதுக்குடியிருப்பு வீதியில் அமைந்துள்ள நினைவாலயத்தில் காலை 9.30 மணிக்கு நினைவேந்தல் நிகழ்வு நடக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

நெடுங்கேணி - முல்லைத்தீவு வீதியில் கயட்டையில் அமைந்துள்ள நினைவாலயத்தில் மாலை 4.30 மணிக்கு நினைவேந்தல் நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

இந்த நினைவேந்தல் நிகழ்வுகளில் உறவுகளை இழந்தவர்களையும் பொது மக்களையும் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (ச)

### புலிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிளிநொச்சி, யாழ்ப்பாணம் பகுதிகளைச் சேர்ந்தவர்களாவர்.

புதுக்குடியிருப்பு கைவேலி காட்டுப் பகுதியில் முன்னர் புலிகளின் முகாம் செயற்பட்டது. அங்கு புலிகள் தங்கத்தை புதைத்து வைத்திருக்கலாம் என்ற சந்தேகத்தில் 11 பேர் நிலத்தைத் தோண்டினர்.

இதற்காகக் கனரக வாகனங்களையும் பயன்படுத்தியிருந்தனர். இது குறித்து தகவல் அறிந்த பொலிஸார் அங்கு சென்று அனைவரையும் கைது செய்தனர். அத்துடன் வாகனங்களையும் தோண்டப் பயன்படுத்திய உபகரணங்களையும் கைப்பற்றினர்.

கைது செய்யப்பட்டவர்கள் இன்று முல்லைத்தீவு நீதிமன்றில் முற்படுத்தப் படவுள்ளனர். (ச)

### அஞ்சல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெறும் எனத் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

அத்துடன், ஜனவரி 8 ஆம் திகதி அரச சேவையாளர்கள் வாக்களிப்பதற்கான வாக்காளர் அட்டையை உறுதிப்படுத்துவதற்கான செயற்பாடுகள் மேற்கொள்ளப்படும் எனவும் மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் எம் எம் மொஹமட் தெரிவித்தார்.அதன்படி தகுதியுடைய அரச சேவையாளர்களுக்கு அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்குத் தேவையான வாக்கட்டைகள் அடங்கிய பொதி, ஜனவரி மாதம் 11 ஆம் திகதி அஞ்சலிடப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார். (அ)

### வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றும் நல்லிணக்க அமைச்சின் செயலாளர் வி.சிவஞானசோதி தெரிவித்துள்ளார்.

"முதற்கட்ட நடவடிக்கையின் கீழ், யாழ் மாவட்டத்தில் யாழ்ப்பாணம் - மானிப்பாய் - காரைநகருக்கு உட்பட்ட 27. 7 கிலோ மீற்றர் வீதியும், யாழ்ப்பாணம் - பொன்னாலை - பருத்தித்துறைக்கும் இடைப்பட்ட 36 .15 கிலோ மீற்றர் வீதியும், வழுக்கையாறு - புங்குடுதீவு - குறிகட்டுவானுக்கு உட்பட்ட 24. 5 கிலோ மீற்றர் வீதியும் புனரமைக்கப்படவுள்ளன.

கிளிநொச்சியில் முறிகண்டி, கனகபுரம், டிப்பிக்கேசன் வீதியும், முல்லைத்தீவில் வன்னிவிளாங்குளம், பனங்காமம் உட்பட்ட வீதியும், இரட்டைவாய்க்கால் மத்தளன் சாலை வீதியும், வற்றாப்பளை பிரதான வீதியும், மன்னார் மாவட்டத்தில் பிரமனாலங்குளம், பெருப்புக்கடந்தான் வீதியும், மஹிலங்குளம், பள்ளமடுவுக்கு உட்பட்ட வீதிகள் பலவும் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

திருகோணமலை மாவட்டத்தில் தோப்பூர் மத்திய வீதி, சீதனாவெளி - பாட்டாளிபுரம் வீதிகளும், அம்பாறை மாவட்டத்தில் பானம, கும்புக்கல் வீதியும், சியம்பலாண்டுவ - தமண வீதிக்கு உட்பட்ட பல வீதிகள் புனரமைக்கப்படவுள்ளன. மட்டக்களப்பு மாவட்டத்தில் கிரான் - தொப்பிகல வடமுனை வீதியும் மரைன்ட்ரைவ் உட்பட பல வீதிகளும் புனரமைக்கப்படவுள்ளன" என்று தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சின் செயலாளர் வி.சிவஞானசோதி குறிப்பிட்டுள்ளார். (அ)

### முதலமைச்சரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தது. இதனால் கடந்த ஒரு வருட காலமாக அது பயன்பாடின்றிக் கிடந்தது. இந்நிலையில் புதிய பேருந்து நிலையத்தில் இருந்து தனியார், இ.போ.ச. பேருந்துகள் நேற்றுமுதல் சேவையில் ஈடுபடும் என அறிவிக்கப்பட்டது.

இதையடுத்து இ.போ.ச. பேருந்துகள் சேவையில் ஈடுபட்ட நகரசபைக்கு சொந்தமான பகுதியில் தனியார் வாகனங்கள் சென்றுவர மட்டுமே அனுமதி வழங்குவதுடன், 24 ஆம் திகதி நள்ளிரவுடன் அதை மூடுமாறு வட மாகாண சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருக்கு கடிதம் மூலம் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் உத்தரவிட்டார்.

ஆனால் அக்கட்டளை நிறைவேற்றப்படவில்லை. இந்நிலையில் தமக்கு மூடுமாறு உத்தரவு வரவில்லை என்றும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருக்கே கடிதம் அனுப்பப்பட்டதாக வவுனியா தலைமைப் பொலிஸ் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார். அத்துடன் நகர சபையினரே நிலையத்தை மூட வேண்டும் என பழைய பேருந்து நிலையத்துக்கு சென்ற நகர சபை செயலாளரிடம் தெரிவித்துள்ளனர். அவர்கள் மூடும் பட்சத்தில் தாம் பாதுகாப்பு அளிப்பதாகவும் அவர்கள் கூறியுள்ளனர்.

முதலமைச்சரின் உத்தரவை பொலிஸார் கடைப்பிடிக்கப்படாமையால் நேற்றும் வழமைபோன்றே இ.போ.ச. பேருந்துகள் சேவையில் ஈடுபட்டன. (ச)

### தடைநீக்கம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யடுத்து, இலங்கைத் தேயிலையை இறக்குமதி செய்ய ரஷ்ய அரசு தடைவிதித்தது.

இந்தத் தடையை நீக்குவதற்காக இலங்கை இராஜதந்திர மட்டத்தில் பல நகர்வுகளை மேற்கொண்டிருந்தது. குறிப்பாக ரஷ்யாவிலிருந்து அஸ்பெஸ்டஸ் கூரைத் தகடுகளை இறக்குமதி செய்ய 2020 ஆம் ஆண்டு கொண்டுவரப்படவிருந்த தடையையும் இலங்கை விலக்கிக் கொண்டிருந்தது.

இத்தகையை விட்டுக் கொடுப்புகளின் அடிப்படையிலும், இனிமேல் இவ்வாறான வண்டுகள் உள்ள தேயிலை ரஷ்யாவுக்கு அனுப்பப்படமாட்டாது என்ற இலங்கையின் உறுதிமொழியையும் அடுத்து, குறித்த தடையை விலக்க ரஷ்யா சம்மதம் தெரிவித்துள்ளது.(அ)

### நலம்தானா?...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காரணமாகக் கொழும்பில் உள்ள தனியார் மருத்துவமனை ஒன்றில் அவர் அனுமதிக்கப்பட்டார்.இந்நிலையில், சிகிச்சை பெற்று வந்த எதிர்கட்சித் தலைவரை, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச ஆகியோர் நேற்றுச் சந்தித்து நலம் விசாரித்தனர். (அ)

### கப்பலைத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கப்பலுக்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்படவில்லை என்று தெரியவருகின்றது.

மார்கழித் திருவாதிரைத் திருவிழா நேற்று ஆரம்பமானது. எதிர்வரும் ஜனவரி 3ஆம் திகதி ஆருத்ரா தரிசனத்துடன் இந்த திருவிழா நிறைவடையும்.

இதில் பங்கேற்கும் வட இலங்கைப் பக்தர்களின் நலன்கருதி, காங்கேசன் துறையில் இருந்து சென்னைக்கு பயணிகள் கப்பல் சேவையை நடத்த, இந்திய அரசாங்கம் அனுமதி அளித்துள்ளது.

இதுதொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய துணைத் தூதரகத்தினர் " நாங்கள் யாத்திரிகர்களுக்கு தேவையான விசாவை வழங்குவோம். நூறு வரையானோர் எம்மிடம் பதிவுகளை செய்துள்ளனர். இந்தவார தொடக்கத்தில் இன்னும் அதிகமானோர் பதிவுகளைச் செய்யலாம்." என்று தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில், திருவாதிரை திருவிழாவில் பங்கேற்பதற்காக, நூற்றுக்கும் அதிகமான பக்தர்கள் கப்பலுக்காகக் காத்திருக்கின்றனர்.

ஆயினும், பக்தர்களை சென்னைக்கு ஏற்றிச் செல்வதற்கான கப்பல் இன்னமும் ஒழுங்கு செய்யப்படவில்லை.

பொருத்தமான கப்பலைத் தேடும் பணிகளை வடக்கு மாகாண ஆளுநர் மேற்கொண்டுள்ளார். (அ)

### தேர்தலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டுள்ளனர். அவர்கள் நீதிமன்றின் உத்தரவில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

தேர்தல் சட்டங்களை மீறுவோருக்கு உள்ளூராட்சித் தேர்தல் முடிவடையும்வரை பிணை வழங்கப்படமாட்டாது" என்று பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்தது.(அ)

உங்கள் துயரில் பங்கெடுக்கவும், உறவுகளுக்கு அறிவிக்கவும்

- மரண அறிவித்தல்
- நினைவஞ்சலி
- கண்ணீர் அஞ்சலி

கட்டணம் இன்றி பிரசுரிக்க

இன்றே தொடர்பு கொள்ளுங்கள்

எதிரொலி Ethiroli

021 3004848

நிபந்தனை களுக்குட்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நா. தடைக்கு வடகொரியா எதிர்ப்பு

வடகொரியா,டிசெ.26

ஐ.நா. விதித்துள்ள புதிய பொருளாதாரத் தடையை ஏற்க முடியாது என்றும் இது போர் தொடுக்கும் செயல் என்றும் வட கொரியா நேற்றுத் திங்கட்கிழமை தெரிவித்தது.

இதுகுறித்து வடகொரிய வெளியுறவு அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில், "எங்கள் நாட்டின் பாதுகாப்புக்காக அணு ஆயுதங்களைத் தயாரிக்கிறோம். இது சர்வதேச விதிமுறைக்கு எதிரானது அல்ல. ஆனால், எங்கள் நாட்டின் மீது ஐ.நா. புதிய பொருளாதாரத் தடை விதித்துள்ளது.

இதற்கு அமெரிக்கா உள்ளிட்ட சில நாடுகள் காரணம். இது கொரிய தீபகற்பப் பகுதியில் அமைதி மற்றும் ஸ்திரத்தன்மையைச் சீர்குலைத்துப் போர் தொடுக்கும் செயல் ஆகும். இதுதொடர்பான தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களித்த நாடுகள் மீது கடும் நடவடிக்கை எடுப்போம்" எனத் தெரிவித்தது. (எ)

# மோடியின் கிறிஸ்மஸ் வாழ்த்து


புதுடெல்லி,டிசெ.26

கிறிஸ்மஸ் பண்டிகையையொட்டிக் கிறிஸ்தவ மக்களுக்குப் பிரதமர் மோடி டுவிட்டரில் கிறிஸ்மஸ் வாழ்த்துக்களை நேற்றுத் திங்கட்கிழமை தெரிவித்தார்.

பிரதமர் மோடி வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில்,

"கிறிஸ்மஸ் தினத்தை முன்னிட்டு அனைவருக்கும் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். கிறிஸ்துமஸ் விழாவில் இயேசுவின் போதனைகளை நினைவில் கொள்வோம்" என்று தெரிவித்தார். (எ)

# 11 நாடுகளுக்கு தடை நீக்கம்




வோஷிங்டன்,டிசெ.26

அமெரிக்காவுக்குள் எகிப்து, ஈரான், ஈராக், லிபியா உள்ளிட்ட 11 நாடுகளின் அகதிகள் நுழைய விதிக்கப்பட்ட தடையை ரத்துச் செய்து அமெரிக்கா சீட்டில் நீதிமன்றம் நேற்றுத் திங்கட்கிழமை உத்தரவிட்டது.

எகிப்து, ஈரான், ஈராக், லிபியா, மாலி, சோமாலியா, வடகொரியா, சூடான், சிரியா, ஏமன், தெற்கு சூடான் உள்ளிட்ட 11 நாடுகளைச் சேர்ந்த அகதிகள் அமெரிக்காவுக்குள் நுழையத் தடை விதித்து அதிபர் டிரம்ப் உத்தரவிட்டிருந்தார். இந்தத் தடை உத்தரவு 120 நாட்கள் அமுலிருக்கும் என அறிவிக்கப்பட்டது. ஆனால் அதன் பிறகும் அந்தத் தடை உத்தரவு முழுமையாக நீக்கப்படவில்லை. எனவே அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து அமெரிக்காவின் சீட்டில் நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டது. வழக்கு நீதிபதி ஜேம்ஸ் ராபர்ட் தலைமையில் நடந்தது.

மேலும், நாட்டின் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு இத்தகைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவித்தனர். ஆனால், அதை நீதிபதி ஏற்கவில்லை. எனவே 11 நாடுகளின் அகதிகள் அமெரிக்காவுக்குள் நுழைய விதிக்கப்பட்ட தடையை ரத்துச் செய்து உத்தரவிட்டார். 'அரசின் இத்தகைய முடிவு ஒரு தலைபட்சமானது' என நீதிபதி ராபர்ட் தனது தீர்ப்பில் தெரிவித்தார். (எ)




# மிகச் சிறிய கிறிஸ்மஸ் வாழ்த்து அட்டை

லண்டன்,டிசெ.26

நாடு முழுவதும் கிறிஸ்மஸ் பண்டிகை நேற்றுத் திங்கட்கிழமை கொண்டாடப்பட்டது.

இதனை முன்னிட்டு உலகிலேயே மிகச் சிறிய கிறிஸ்மஸ் வாழ்த்து அட்டை தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்த அட்டை 15 மைக்ரோ மீற்றர் அகலமும், 20 மைக்ரோ மீற்றர் நீளம் கொண்டது. அதாவது 15X20 மைக்ரோ மீற்றர் என்ற அளவில் இது தயாரிக்கப்பட்டுள்ளது.

மிகச்சிறிய கிறிஸ்மஸ் வாழ்த்து அட்டையை அதிக சக்தி வாய்ந்த மைக்ரோஸ் கோப் மூலமே பார்க்க முடியும். அப்போது தான் அதில் எழுதப்பட்டிருக்கும் வாசகங்களைப் படிக்க முடியும்.

உலகிலேயே மிகச்சிறிய அளவிலான கிறிஸ்மஸ் வாழ்த்து அட்டை எனச் சாதனை படைத்துள்ள இதை இங்கிலாந்தின் தேசிய இயற்பியல் ஆய்வக விஞ்ஞானிகள் டேவிட்காஸ், கென் மிஸ்கார்ட் ஆகியோர் உருவாக்கினர். (எ)

# இஸ்ரேலுக்கு ஆதரவாக தூதரகத்தை மாற்றும் கவுதமாலா

கவுதமாலா சிட்டி,டிசெ.26

அமெரிக்காவைத் தொடர்ந்து இஸ்ரேலுக்கு ஆதரவாகத் தன்நாட்டுத் தூதரகத்தை ஜெருசலேம் நகருக்கு மாற்றப்போவதாகக் கவுதமாலா அதிபர் அறிவித்தார்.

இஸ்ரேலின் தலைநகராக ஜெருசலேமை அங்கீகரித்து அமெரிக்க அதிபர் டிரம்ப் கடந்த மாதம் அறிவிப்பை வெளியிட்டார். மேலும், தூதரகத்தை ஜெருசலேமுக்கு மாற்றவும் அவர் உத்தரவிட்டார். டிரம்ப் முடிவுக்கு உலக நாடுகள் கடும் எதிர்ப்பைப் பதிவு செய்தன. பாலஸ்தீனத்தில் இது பெரும் கொந்தளிப்பான நிலையை ஏற்படுத்தியது.

இதனை அடுத்து, அமெரிக்காவின் இந்த முடிவைத் திரும்பப் பெறக்கோரிச் சில தினங்களுக்கு முன்னர் ஐ.நா. பொதுச்சபையில் தீர்மானம் கொண்டுவரப்பட்டது. இதனை ஆதரித்து வாக்களிக்கும் நாடுகளுக்கு நிதியுதவிகள் நிறுத்தப்படும் என்று டிரம்ப் வெளிப்படையாகவே மிரட்டல் விடுத்தார்.

இருப்பினும், 128 நாடுகள் இந்தத் தீர்மானத்தை ஆதரித்தன. 9 நாடுகள் மட்டுமே எதிர்த்து வாக்களித்தது. இதனால், அமெரிக்காவுக்கு நெருக்கடியான சூழல் ஏற்பட்டது. இந்த நிலையில், இந்தத் தீர்மானத்தை எதிர்த்து வாக்களித்த நாடுகளில் ஒன்றாகக் கவுதமாலா, டெல் அவிவ் நகரில் உள்ள தனது தூதரகத்தை ஜெருலேமுக்கு மாற்றப் போவதாக கவுதமாலா அதிபர் ஜிம்மி மோராலெஸ் அறிவித்தார். மத்திய அமெரிக்க நாடான கவுதமாலா, அமெரிக்காவின் மிக நெருங்கிய நட்பு நாடு என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

# சூர்யாவுடன் மோதும் திரிஷா



சென்னை,டிசெ.26

சூர்யா நடிப்பில் உருவாகியுள்ள படமும், நடிகை திரிஷா நடிப்பில் உருவாகியுள்ள படமும் ஒரே நாளில் வெளியாகி மோத இருக்கிறது.

சூர்யா நடிப்பில் தற்போது உருவாகி இருக்கும் படம் 'தானா சேர்ந்த கூட்டம்'. இதில் இவருக்கு ஜோடியாகக் கீர்த்தி சுரேஷ் நடித்துள்ளார். மேலும் நவரச நாயகன் கார்த்திக் முக்கிய வேடத்தில் நடித்துள்ளார். விக்னேஷ் சிவன் இயக்கியுள்ள இந்தப் படத்தை அனிருத் இசையமைத்துள்ளார்.

இந்தப் படம் பொங்கலுக்கு வெளியாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அன்றைய தினத்தில் திரிஷா நடிப்பில் உருவாகியுள்ள 'மோகினி' படமும் வெளியாகவுள்ளது.'மோகினி' படத்தை ஆர்.மாதேஷ் இயக்கியுள்ளார். பிரின்ஸ் பிக்சர்ஸ் நிறுவனம் படத்தைத் தயாரித்துள்ளது. (எ)

# ஆதரவற்ற குழந்தைகளுக்கு ஹரீஸின் கிறிஸ்மஸ் பரிசு

சென்னை,டிசெ.26

'பிக்பாஸ்' நிகழ்ச்சியின் மூலம் ஹரீஸ் கல்யாண், மக்கள் மனதில் நல்லதோர் இடத்தைப் பிடித்துவிட்டார்.

சொல்லப்போனால் ஓவியாவுக்கு அடுத்தபடியாக ரசிகர்களுக்குப் பிடித்தவர் இவர்தான்.

தற்போது இளன் இயக்கத்தில் பிக்பாஸ் நிகழ்ச்சியில் கலந்து கொண்ட மற்றொருவரான ரைசாவுடன், 'பியார் பிரேமா காதல்' படத்தில் நடித்து வருகிறார் ஹரீஸ். முதல் முதலாக இருவரும் ஒன்றாக இணைந்து நடிக்கிறார்கள்.

இந்நிலையில், நேற்று கிறிஸ்மஸ் பண்டிகையை முன்னிட்டு அவர் ஆதரவற்ற குழந்தைகளுக்குக் கேக் வழங்கி, பரிசு கொடுத்துக் கொண்டாடினார். (எ)



# அம்மாவாகும் மீனா

சென்னை,டிசெ.26

நடிகை மீனா தமிழ் சினிமாவில் மிகவும் பிரபலமாக இருந்தவர். அவரது மகள் நைனிகா தெறி படத்தின் மூலம் அறிமுகமானார். தற்போது பாஸ்கர் தி ராஸ்கல் படத்திலும் நடித்துள்ளார். சமீபத்தில் நடிகை மீனா மலையாள சினிமாவில் நடிக்கத் தொடங்கியுள்ளார்.

மோகன் லாலுடன் திருஷ்யம் ஹிட்டாகத் தொடர்ந்து அவரோடு முந்திரிவள்ளிகள் படத்தில் நடித்தார். மேலும் திருஷ்யம் தெலுங்கு ரீமேக்கிலும் நடித்தார். தற்போது தெலுங்கில் ஒரு படத்தில் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார்.

இதில் இளம் நடிகரான பெல்லம் கொண்டா ஸ்ரீனிவாஸ்க்கு அம்மா நடிக்கிறாராம். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பொக்சிங் டே டெஸ்ட்

# ஸ்ராக்கிற்கு பதில் பேர்ட்

மெல்பேர்ன், டிசெ. 26

அவுஸ்ரேலியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான நான்காவது டெஸ்ட் போட்டி இன்று மெல்பேர்னில் தொடங்குகிறது.

பொக்சிங் டே டெஸ்ட் என அழைக்கப்படும் இந்தப் போட்டியில் வெற்றி பெற வேண்டும் என்ற முனைப்பில் அவுஸ்ரேலியா களமிறங்கவுள்ளது.

முதல் 3 டெஸ்ட்களிலும் வேகப்பந்தால் இங்கிலாந்துக்கு நெருக்குதல் கொடுத்தவர் மிற்சல் ஸ்ராக்.

அவர் குதிக்கால் காயத்தால் அவதிப்படுவதால் இந்தப் போட்டியில் அவருக்கு ஓய்வு வழங்கப்பட்டுள்ளது. இதனால் அவருக்குப் பதிலாக ஜேக்சன் பேர்ட் சேர்க்கப்பட்டுள்ளார்.

ஸ்ராக்கிற்கு சிறிய காயமே ஏற்பட்டபோதிலும் தென்னாபிரிக்காவுடனான தொடரில் அவரின் பங்களிப்பு அவசியம் கருதியே இந்த ஓய்வு அளிக்கப்பட்டுள்ளது. (ச)

# மன்செஸ்டர் சிற்றி வெற்றி

மன்செஸ்டர், டிசெ. 26

இங்கிலாந்து உதைபந்தாட்டக் கழகங்களுக்கு இடையிலான பிறீமியர் லீக் தொடரில், நேற்று முன்தினம் இடம்பெற்ற போட்டிகளில் மன்செஸ்டர் சிற்றி, டொட்டென்ஹாம் ஹொட்ஸ்பர் ஆகிய அணிகள் வென்றுள்ளன.

மன்செஸ்டர் சிற்றி, 4-0 என்ற கோல் கணக்கில் ஏ.எவ்.சி போர்ண்மெத்தை வென்றது. மன்செஸ்டர் சிற்றி சார்பாக சேர்ஜியோ அகுரோ இரண்டு கோல்களையும் ரஹீம் ஸ்டேர்லிங், டனிலோ ஆகியோர் தலா ஒவ்வொரு கோலையும் பெற்றனர்.

டொட்டென்ஹாம் ஹொட்ஸ்பர், 3-0 என்ற கோல் கணக்கில் பேர்ண்லியை வென்றது. டொட்டென்ஹாம் ஹொட்ஸ்பர் சார்பாகப் பெறப்பட்ட மூன்று கோல்களையும் ஹரி கேன் பெற்றார்.

மன்செஸ்டர் யுனைட்டெட், லெய்செஸ்டர் சிற்றி ஆகிய அணிகளுக்கிடையிலான போட்டியில் இரண்டு அணிகளும் தலா இரண்டு கோல்களைப் பெற்ற நிலையில் போட்டி சமநிலையில் முடிவடைந்தது. மன்செஸ்டர் யுனைட்டெட் சார்பாகப் பெறப்பட்ட இரண்டு கோல்களையும் ஜூவான் மாத்தா பெற்றதோடு, லெய்செஸ்டர் சிற்றி சார்பாக ஜேமி வார்டி, ஹரி மகூரி ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

செல்சி, எவெர்ற்றன் அணிகளுக்கிடையிலான போட்டியில் இரண்டு அணிகளும் கோலெதனையும் பெறாத நிலையில் போட்டி சமநிலையில் முடிவடைந்தது.

# 26 ஐ விட 36 வேகம்



புதுடில்லி, டிசெ. 26

36 வயதிலும் 26 வயதான இளம்வீரரை டோனியால் வெல்ல முடியும் என்பது எங்களுக்குத் தெரியும். அவரைப் பற்றிப் பேசும் முன்னாள் வீரர்கள் தாங்கள் விளையாடியதை மறந்துவிட்டுப் பேசுகிறார்கள். இப்படி டோனிக்கு எதிராகப் பேசுவோருக்குப்பதிலடிகொடுத்திருக்கிறார் இந்திய அணியின் பயிற்றுவிப்பாளர் ரவி சாஸ்திரி.

அண்மைக்காலமாக டோனியின் மந்தமான ஆட்டம் குறித்துப் பலரும் விமர்சித்து வருகிறார்கள். இந்நிலையிலேயே ரவி சாஸ்திரி மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டுள்ளார்.

மேலும், " நாங்கள் முட்டாள்கள் இல்லை. கடந்த 30 தொடக்கம் 40 ஆண்டுகள் கிரிக்கெட்டைப் பார்த்துக் கொண்டு வருகிறேன். இன்னும் 10 ஆண்டுகளில் கோலி இந்திய அணியின் முக்கிய அங்கமாக இருப்பார். 36 வயதிலும் 26 வயது இளம் வீரரை டோனியால் வெல்ல முடியும். அவரைப் பற்றிப் பேசும் முன்னாள் வீரர்கள் தாங்கள் விளையாடியதை மறந்துவிட்டுப் பேசுகிறார்கள்.

விமர்சிப்பவர்கள் 36 வயதில் கண்ணாடி முன் நின்று வேகமாக 2 ஓட்டம் ஓடமுடியுமா என்று கேட்கவே முடியும். ஆனால் டோனி 2 ஓட்டங்களை எடுக்க முன்னர் 3 ஓட்டங்களை எடுத்து விடுவார். டோனி மட்டுமே 2 உலகக் கிண்ணங்களை வாங்கிக் கொடுத்தார். சராசரி 51 ஓட்டங்களுக்கு மேல் வைத்துள்ளார். தற்போதைய நிலையில் ஒருநாள் அணியில் விக்கெட் காப்பாளரை மாற்ற வேண்டிய தேவை இல்லை" - என்றார். (ச)



# செரீனா மீண்டும் களத்தில்

நியூயோர்க், டிசெ. 26

அமெரிக்க ரென்னிஸ் வீராங்கனை செரீனா வில்லியம்ஸ் மீண்டும் களமிறங்கவுள்ளார். அண்மையில் தாயான செரீனா ரென்னிஸ் போட்டிகளில் இருந்து விலகியிருந்தார். இந்நிலையில் அபுதாபியில் நடக்கவுள்ள முபாதலா கண்காட்சிப் போட்டியில் மீண்டும் களமிறங்கப் போகிறேன் என அவர் அறிவித்துள்ளார்.

"செப்ரெம்பரில் மகள் பிறந்தபிறகு மீண்டும் ரென்னிஸ் களத்துக்குள் காலடி எடுத்து வைப்பதில் பெருமை கொள்கிறேன். இந்தப் போட்டியின் மூலம் நான் மீண்டும் களமிறங்கவுள்ளேன்" என 36 வயது செரீனா கூறியுள்ளார்.

திடீரென அபுதாபி போட்டியில் விளையாடுவதாக செரீனா அறிவித்திருப்பது ரென்னிஸ் வட்டாரத்தில் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது. வரும் சனிக்கிழமை நடைபெறவுள்ள கண்காட்சி போட்டியில் பிரெஞ்சு ஓப்பன் சம்பியன் ஜெலீனாவை எதிர்கொள்கிறார் செரீனா.

இதையடுத்து ஜனவரி மாதம் நடைபெறவுள்ள அவுஸ்ரேலிய ஓப்பன் போட்டியில் பங்கேற்கவும் செரீனா திட்டமிட்டுள்ளார். (ச)

# இலங்கையால் முன்னேறியது இந்தியா

டுபாய், டிசெ. 26

ருவென்ரி - 20 அணிகளுக்கான ஐ.சி.சியின் தரவரிசையில் இந்திய அணி இரண்டாவது இடத்துக்கு முன்னேறியது. 121 புள்ளிகளுடன் நான்காவது இடத்தில் இருந்த இந்திய அணி 3-0 என்ற கணக்கில் இலங்கையை வெற்றி கொண்டதன் மூலமே இந்த முன்னேற்றம் சாத்தியமானது.

124 புள்ளிகளுடன் முதலிடத்தை பாகிஸ்தான் தக்க வைத்துள்ளது. மேற்கிந்தியத் தீவுகள், நியூசிலாந்து அணிகள் 120 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்திலும் இங்கிலாந்து 119 புள்ளிகளுடன் 5 ஆவது இடத்தில் உள்ளன.

வீரர்களுக்கான தரவரிசையில் போட்டிகளில் பங்கேற்காததால் முதலிடத்தில் இருந்த கோஹ்லி மூன்றாவது இடத்துக்கு பின்னடைந்துள்ளார். ராகுல் 4 ஆவது இடத்துக்கும், ரோஹித் சர்மா 14 ஆவது இடத்துக்கும் முன்னேறியுள்ளனர். (ச)

# தனஞ்சயவும் விலகினார்!

கொழும்பு, டிசெ. 26

பங்களாதேஷ் முக்கோண ஒருநாள் போட்டியில்இருந்து தனஞ்சய டீசில்வா விலகியுள்ளார்.

இலங்கை, பங்களாதேஷ், சிம்பாப்வே அணிகள் பங்கேற்கும் ஒருநாள் போட்டித் தொடர் பங்களாதேஷில் ஜனவரியில் நடக்கவுள்ளது.

இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் காயமடைந்த தனஞ்சய இன்னமும் குணமாகவில்லை. இதனாலேயே அவர் இத்தொடரில் இருந்து விலகியுள்ளார்.

முன்னதாக காயம் காரணமாக அஞ்சலோ மத்தியூஸும் தொடரில் இருந்து விலகியமை குறிப்பிடத்தக்கது. (ச)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 26.12.2017 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.